# ஆதி மார்க்க னீதி மொழி

**July 2025**

***இதழ் 48 – ஜூலை மாதம் 2025 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai July 2025

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் நன்மை தரும் நற்பொழுதில் நறுமண மலராக நன்மக்களின் கைகளில் ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகை 14 அவை மற்றும் 5 இசை வகுப்பு நிகழ்வுடன் 48ஆம் இதழாக மலர்ந்து மெய்ம்மணம் கமழ்கிறது.

சாலை ஆண்டவர்கள் சிவானுபவமாகப் பெற்ற ஜீவனின் ரகசியமான சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல் எனும் உறுபொருளின் ரகசியத்தை தங்களின் ஆனந்தக் களிப்பு, பத்தியத்திடம் பாடலில் அருளியுள்ளதை பிரதிபலிக்கும் கண்ணாடியே இம் மின்னணு சஞ்சிகை. இதனைப் பார்த்தாலும் படித்தாலும் அதற்குரிய திருச்சிற்றம்பலப் பொருளை குருவருளால் பழகி அனுபவிப்பதே நிஜமான பேரின்பம். கங்குல் பகலற்ற இடத்தில் எழுதாத எழுத்தாக, ஓதாமல் ஓதும் வேதமாக, அவரவரின் நாமத்திற்கு உரிய ஜீவனே, மெய்ஞான ஒருருளை தேவரதப் பொருளாக அடி முடி நடுவற்ற ஒன்றாக உள்ளது.

சாலை ஆண்டவர்கள் அருணிலைகால் தலையும் பரிபாஷை கல்லார் ஆயுளெல்லாம் படித்தும் பொருளறியப் போகார் என ஞானனூற் பொருளறிதல் பாடலிலும், முப்பொருள்க்கோல விளக்கமாக அலீப்-லாம்-மீம், தாலிக்கல் கிதாபு என தங்களின் ஆதி மான்மியத்திலும் அருளியதையே அக்காலத்தில் சித்தர்கள் இயல் தமிழில் இயம்பியுள்ளனர். சர்வலோக சர்வஜீவ தயாபரனை அறிய வைக்கும் மூன்று அட்சரமான அலீப்-லாம்-மீம் என்பதை அறிந்து ஜீவன் கண்டு ஜென்ம சாபல்ய குலமான நீதியெனும் பொருள் ஆன மனுவைப் படைத்த நித்தியனாம் இறைவனே சாகாத்தலையெனும் ஜீவன். இதனை அறிந்து அடைந்த உயிருடலம் தேவராமே என சாலை ஆண்டவர்கள் வேதாந்த முகப்பாக அருளியுள்ளார்கள்.

மெய் ஞானத் திறவு கோலாக சன்மார்க்க மரபாக விளங்கும் முப்பொருள்க் கோல விளக்கத்தை அறிந்து உணரவே பாற்கடலை காய்ச்சி வடித்து தெளித்திட்ட வேதாந்தம் போல் அவை நிகழ்வுகளை இரத்தினச் சுருக்கமாக என் மக்கள் வழங்கி உள்ளனர். செவி வாயிலாக அருந்தி அறிவு ஒளிர உள்ளம் தித்தித்து உயிர் பூரிக்கும் இதனை உலகெலாம் பெற்று உய்ய வேண்டும் என எல்லாம் வல்ல எம்பெருமான் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*உன் ரக்ஷிப்புக்குரிய தேவ ரகசியச்செயலே இங்நு வாக்கியமாக இறக்கப் பெறுகிறது. அதை உன் செவியில் வாங்ஙி - சிந்நித்து - பிறரிடம் பேசுவது, தவத்தைக் காண எத்தனையோ மடங்நு அதீதமான உன்னதமுடையது.*

*னின்றதொரு பிரளயத்தின் அதிசயங்ஙள் னெடுங்ஙாலம் னீ இருந்நே காணவேணும். னீ இருந்நு காணவேணு மென்றுதான், எம் தொனியும், எமது ஆத்திரமும், எமது கோபமும், எமது வினயமும், எமது சிரிப்பும், எம் விழிப்பும், எம் சுறுசுறுப்பும், எம் ஆசையும், எம் பாடு பரப்பும் எல்லாம் அதற்காகவேதான்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 ஜூன் மாதம் அவை நிகழ்வுகள் – 2025 ஜூலை மாதம் வெளியீடு

## 01-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **என்னமோ வென்றுவும்மை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி சாந்தினி:* கோடானு கோடி ஜீவ பேதங்களுக்கு இடையே அமானிதம் எனும் அறிவு சீதனத்தை சுமந்து வந்தவன் மனு ஒருவனே. ஆசான் அருளால் தன் ஜீவனாகிய சிவனை அறிந்தவனே மாண்புடைய மனிதன்.

*ஜீவசகோதரி பொன்லஷ்மி:* ஒரு மெய்க்குருவின் அருளமுதத்தால் னபுசாக இருந்த மனம் சிபத்தாக மாறும் மெய்ச் செயலே சித்த யோகம். குருவருளால் இதனை உணர்ந்து தேகத்துள் இருக்கும் ஈசனை அறிவதே பூரணத்துவம்.

*ஜீவசகோதரி அருணா:* சகல மொழிகளுக்கும் பிதுர் மொழியாம் தமிழே நம் அறியாமை அகற்றி அனுபூதி தரும் என்பது வள்ளலார் வாக்கு. அதுவே உயிராக பஞ்சாட்சரமாக அறிவாக ஆயுதமாக இருப்பதை நம் அகக்கண் திறக்கும் ஆசான் அருளால் அறிந்து ஆதி புள்ளியில் அடங்குவதே அடக்கம்.

*ஜீவசகோதரர் பழனி செல்வராஜ்:* சொல் ஏர் உழவராக வரும் எதார்த்த தேவகுருவே நம் புறநோக்கான மனதை அக நோக்கமாக அறிவாக மாற்றி, தலையான தலையை அறியச் செய்து அதில் குடியேறி வாழச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் ஜெகநாதன்:* உயிரினும் மேலான ஒழுக்கமே அகவாழ்வின் முதலாகும். வள்ளலார் அருளிய நான்கு புருஷார்த்தமே விழுப்பம் ஆகும். குருபிரான் தன் இரக்கத்தால் வீணாகும் நம் வயது வாழ்நாளை மீட்டு நித்திய பேரின்ப வீட்டில் குடியேறச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரி திவ்யபிரியா:* ஆசைக் கடலில் அகப்பட்டு அந்தகன் கை பாசத்தால் அல்லல் படும் நம் அழி செயலை அறவே துடைத்து அகமியத்தில் அறம் செய்ய அருள் புரியும் ஆசானின் செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றல் அரிது.

*ஜீவசகோதரர் ஆலன்:* மனு தன்னை வாழ வைக்கும் பிராணனை இயக்கும் பிரம்மத்தை ஆசான் அருளால் அறிவதே தன்னை அறிதல். தன்னை அறியும் தவமுறையில் தலையிட்டு தடையற்ற ஆனந்தம் பெற வழிகாட்டும் தலமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி ஹேமலதா:* ஆசானின் அருளமுதத்தை உண்டு மறுபிறப்பு பெற்ற மனுவே துவிஜன். சாமுன் சாகப் பழகும் வித்தையை நம் தலையில் ஏற்றி வைத்த ஆசானே நீத்தார் பெருமைக்கு உரியவர். செத்ததன் வயிற்றில் பிறந்த சிறியதே அவரவரின் நாமத்திற்குரிய பொருள் என அறியச் செய்து அழியா திருநாட்டில் நம்மை குடியேற்றி வைக்கும் அண்ணலின் பாதம் பணிந்து உய்வோமாக.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 04-06-2025 ~ புதன்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேதநெறி உண்மையாய் ஒழுகிவளர்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
முத்தி தரும் மெய்ப்பொருள் ஒவ்வொரு மனுத் தலையுள்ளும் ஏதுமிலாத பரவெளியாக இருப்பதை பூஜ்ஜியத்திற்குள் ராஜ்ஜியம் செய்யும் மாதவப் பெரியோரின் அருளால் அறிந்தே முக்தி பெற முடியும்.

**கோடாயிதக்கூர் : திருவாக்கியம் எண் - 6 : குருபிரான் அருளமுதம்:**
சர்வ மதங்களின் அடிநாதம் மறலி கை தீண்டாமை என்பதை மெய் மகத்துக்களின் போதனா சக்தியால் அறிந்து சாமுன் சாகப் பழகி காலமற்ற சாலை வள நாட்டில் சாயுச்ய பதவி பெறுவதே பேரின்பப் பெருவாழ்வாம்.

**ஆனந்நக் களிப்பு - குருபிரான் அருளமுதம் :**
உயிர்க் களிப்பு தரும் உத்தமரின் ஓசை கொண்ட நடனத்தில் கலந்து இன்புறுவதே ஆனந்தக் களிப்பு. எதற்கும் முதற் பொருளான பஞ்ஞாட்சர ரூபியை, ஆசான் அணிவிக்கும் கரத்தால் திரிக்கப்படாத பூணூலின் துணை கொண்டு அறியும் இரகசியமே கதி சஞ்ஞீவி. அறியாமையால் இயங்கும் ஐம்புல நுகர்வும் அகக் கரணங்களும் ஆசான் அருளால் அறிவுப் பிரகாசம் உண்டாகும் பொழுதே ஓய்கின்றன. பிறப்பறுக்கும் பிஞ்சகன் நோக்கால் பிடரிக்கண் திறக்கப் பெற்று ஜீவனுடன் கலந்து கருவி கரணங்கள் ஓய்ந்து ஏகாந்த நிலையில் திளைப்பதே ஆனந்தக் களிப்பு என்ற ஆசீர்பாத ஒலிவாயுரையுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 07-06-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்கமதிடத்தில் ஐம்புலக் கதவை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஜீவன் எனும் செம்பொருள் ஐம்புலன் வழியாக அசைந்தே அகிலமெல்லாம் அசைகிறது என அறிவதே அறிவு. ஆசான் அருளும் னாத தொனியை கவனமாக சுத்த ஓர் னினைவாக உள்வாங்கி ஆறாம் அறிவை அறிந்தே அறியாமையிலிருந்து விடுபட முடியும். தணல் வடிவாக விளங்கும் ஆசானைச் சார்ந்து சரண் புகுந்தவரே அந்தணன்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 164-165 :** அசையா னிலையில் அவரவருள் னின்று ஆண்டு கொண்டிருக்கும் அறிவே ஆண்டவராகவும், கோடி சூர்யப் பிரகாசமாகவும் உள்ளது. மனவழி செல்வோர் யாவரும் பிறவிச் சுழலில் சிக்குகின்றனர். மரண பயம் மாற்றி வைக்கும் குருவின் வாய்மைக்குள் ஆகிக் கொண்டவரே பிறவாமை பெறுகின்றனர்.

*ஜீவசகோதரர் குமார்:* **வேதாகமம்: யாகோபு - அதிகாரம்: 4 வாக் 1,5 - ஜான் அதிகாரம் 1:** யாதொன்றும் தீதிலாத வாய்மைத் துலக்கம் கொண்ட பெரியோர்களே னம் மனதின் மடைமாற்றி அறிவெனும் மேட்டில் ஏற்றி வைக்கின்றனர். மனதின் புறநோக்கை அகநோக்காக மாற்றி வைக்கும் குருவின் திருனோக்கிற்கு இணங்கி. தூங்காமல் தூங்கி சுகம் பெறும் செயல் பழகி எமன் அணுகா எல்லையில் வாழ்வதே நித்திய வாழ்வு.
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 08-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வேதகலைக் கதிபதி மாதுலராகிய...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.



*ஜீவசகோதரர் அஜய் கிருஷ்ணன்:* இல்மு எனும் தாய் ஈன்றதே சுருதிகளும் மறைகளும் மகா வாக்கியங்களும். பரமனின் அருளால் பாதமாக விளங்கும் வேதத்தை தன்னில் அறிவதே தன்னை அறிதல். ஒரு மொழி கீதையான ஒரு மொழியாம் குரு மொழியான மெய்ப்பாலே உறுகோடி னூற்கும் பொருளாகும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* தன்னை அறியும் செயலுக்கான துணைக் கருவிகளே மனம், கவனம், எண்ணம் யாவும். தனது ஒத்த பொருளாம் பிரம்மம், தான் என அறிந்தவனே உயிர் வாழும் மனிதன்.

*ஜீவசகோதரி ஜான்சிராணி:* கோவிலில் காணும் வடிவம் யாவும் நம் அகமிய ரகசியமே. ஓயாத் தொழுகை நடை பெறும் மனித தேகாலயத்துள் ஜீவனே சிவனாக வாடாத தீபமாக உள்ளது.

*ஜீவசகோதரர் செந்தில்:* ஆதி புள்ளியே அகரம் உகரமெனும் அனைத்தின் முதலாகும். குருவருளால் மனிதனாகியே சைவ அசைவ நிலையும், சிவ நிலையான சைவ நிலையே ஞான ஆகாயப் பெருவெளி எனவும் உணர முடியும்.

*ஜீவசகோதரி ஷண்முகபிரியா:* அறவாழி அந்தணனாம் ஆசானின் தாள் சேர்ந்து நித்திய பொருளாம் ஜீவனை அறிந்த பின்பே ஒழுக்கம் கை வரவாகும். ஆசான் நம் மீது வைக்கும் அன்பே நாம் அறம் செய்வதற்கான வழி.

*ஜீவசகோதரர் கணேஷ்கிருஷ்ணன்:* பஞ்ஞாட்சர பொருளை உணர்த்தும் வேதாந்தத்தை அருள்பவரே ஆசான். பாதம் அறிந்தவர்க்கு விளங்கும் வேதத்தைப் படைத்தது வேதாந்தமே.

*ஜீவசகோதரி ஜீவிதா:* பிறவிப் பெருங்கடலில் சிக்கிய மனுவை மீட்க பருமரக் கலமாக, பொற்றாமரை குளத்தில் இருந்து வேத மாமறைகளின் தரம் உணர்த்தும் சங்கப் பலகையாக, பரிசுத்த நினைவுடன் வரும் குருபிரானின் ஜோல்னா பையில் இருந்து சங்க வருகை தரும் சங்க நாதமான ஞானச் சங்கின் ஓசை கேட்டு மனமும் அறிவும் நடத்தும் குருஷேத்திரப் போரில் அறிவே வென்று சாகா வரம் பெற்று சஞ்சீவி ஆகிறது.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* அசலாக ஓதும் செயல் உள்ள மெய்க் கல்வியை அறியாதோர் வாழ்வு நகல் வாழ்வே. அண்ணல் அருளும் அஷ்ட நாளாம் அகரத்தின் சிறப்பை அனைத்து மதமும் இரவின் சிறப்பாக போற்றுகிறது. மெய்க் கல்வியை செவியில் சுவைத்து இறை உணர்வுடன் இருப்பதே பத்தியமும் நோன்பும். இணங்கிய சுபாவமுடன் ஆறும் ஐந்துமாகிய ஈமானை இறை அருளால் இருதயத்தில் உணர்ந்தவனே மனு. அறுவகை சமயமும் ஆறு ஆதாரமாக அறுசுவையாக உள்ளதை ஆசான் அருளால் அறிந்தே அறுபடை வீட்டில் அடைக்கலம் புக முடியும்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 14-06-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி **அங்ஙம திடத்தி லைம்புலக் கதவை யடைக்கும்பே ரறிவெனக் கருளி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
ஐயறிவு ஜீவ பேதங்கள் வரை இறைவன் விதித்த விதிக்குள் வாழ்கின்றன. எமனின் கையேடாகிய விதியை ஆசான் துணை கொண்டு இறைவனின் கையேடாகிய மதியாக மாற்றும் சக்தி பெற்றவன் மனு ஒருவனே. சர்வ மூல மந்திரங்களும் நிரூபணை ஆகும் இடத்தில் குடியேறி வாழ்வதே மரணமிலாப் பெருவாழ்வு. நின்றதொரு பிரளயத்தின் அதிசயத்தை நெடுங்காலம் இருந்து காணவும், பிறவாமை எனும் முக்திக்கு மூலமாக இருப்பதும் ஆசான் திருமேனியே.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 211 : குருபிரான் அருளமுதம்:**
சர்வத்திலும் நின்றாடும் பொது நடத்தரசான ஜீவனை குருவருளால் அறியும் நாளே சாலை, பீடபூமி, பொன்னரங்கம் என்ற அருந்தவ முதலான மெய்ப்பொருள் விடிந்த நாளாகும். அவரவரையும் தாங்குகின்ற ஸ்தூலமே துவஜ ஸ்தம்பமாக உள்ளது.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம் : யாக்கோபு 4 : 3, 4 யோவான் 1 : 2, 16.** ஆவிக்குரிய சிந்தனையற்று மனதின் இச்சையால் கீழாம் மூவாசையில் வீழ்பவன் தேவனின் கட்டளையை மீறிய பகைவன் ஆகிறான். மும்மலம் விட்டு உடல் பற்றற்று, ஜீவனுக்குரிய சிந்தனையுடன் மனம் திரும்பியவனே தேவனின் பரலோக ராஜ்யத்தை அடைகிறான்.

**குருபிரான் அருளமுதம்:** ஆவிக்குரிய சிந்தனையே அஷ்டாங்க யோகமாகும். தூல வாழ்வின் கவலை விட்டு ஜீவ வாழ்விற்காக குருவள்ளல் கொடுத்த வாசுகியின் சஞ்சீவி மூலம் அடைவதே ஆனந்தக் களிப்பாகும். ஆர்வ சித்தம் கொண்டு சாதிக்கும் பிள்ளைகட்கே மெய்ஞ்ஞானம் வாய்க்கும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி அவை இனிதே நிறைவானது.

## 15-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

மாதா, பிதா, குரு, தெய்வமும் சேர்ந்து ஒருருவாக விளங்கும் ஞானத் தந்தையைப் போற்றும் தினமே தந்தையர் தினம். சத்திய வேதம் கூறும் பிதா-சுதன்-பரிசுத்த ஆவி என்பதை குருவருளால் அறிந்தவரே தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை எனும் ஔவையார் மொழி, அறிவுக்கு ஆசானான உலகத் தந்தையைக் குறிப்பதை அறிவர். ஆசான் அருளும் அறிவின் வழி நடந்து உயிர் வீணாகாமல் நீத்தார் பெருமைக்கு உரியவராக விளங்கும் மக்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள். ஆணவச் செருக்குள்ளவன் நரன், மெய்க்குருவை தேடி அடைந்தவன் மனு, மெய்க் குருவின் நாதத்தை செவி மடுப்பவன் தேவனுமாவர். யுகந் தோறும் வெவ்வேறு நாம ரூபத்துடன் வந்து மக்களின் பிறவிப் பிணி தீர்ப்பவரே மெய் ஆசான். ஏகனாயக தத்துவாதீத பரிபூரண புராதன பூர்வீகத்தின் அடையாளமே சின்முத்திரை. தன்னை நாடி வந்த சீடனுக்கு தன் பத்து வயது கன்னித் தாயை மணம் முடித்து வைக்கும் குருவே தகப்பன்சாமி.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் சங்கர்:* கற்பனைக்கு எட்டா கடவுளின் கஜானாவில் இருந்து எடுத்து கங்காளன் பூசும் கவசத் திருநீறே நம் கன்ம வினை தீர்க்கும். சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி நம் சஞ்சலம் தீர்த்து சாகா வரம் தரும் சன்மார்க்க செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 15-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **எண்ணு கின்றனல் லெண்ணம னைத்தையும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* தன் தை எனும் இறை பொருளை அறிவிக்கும் குருவே தந்தையர் தின சிறப்பிற்கு உரியவர்.

*ஜீவசகோதரி சுமதி:* ஞான சூரியனாக வரும் குருபிரான், நம் அறியாமை எனும் இருளகற்றி அறிவில் ஏற்றும் ஞான தீபமே அருட் பெருஞ்ஜோதி. பிரணவம், மூல மந்திரம், ஓங்காரம், எனப் பல பல நாமங்களுடன் விளங்கும் அமானிதப் பொருளை நம் சித்தத்தில் குருபிரான் ஏற்றும் விளக்கின் மூலமே தரிசிக்க முடியும்.

*ஜீவசகோதரி சருபா:* குருவருளால் எண்ணம் சொல் செயல் இவை மூன்றிலும் நன்மையே செய்து வாழும் மனுவே தேவனாகி தெய்வமாகிறான். ஜலத்தில் அக்கினி உருவாய் இருக்கும் சிவனெனும் வாடாத தீபமே, தனக்கு உவமை இல்லாதான் தாளாக நம் மனக் கவலை மாற்றும் திருவடியாக உள்ளது. இதனை ஆசான் தயவால் அறிவதே நம் கட்டாயக் கடமையாகும்.

*ஜீவசகோதரி செஜிதா:* மாயத் தோற்றம் காட்டும் மனக் கண்ணாடியை அறிவுக் கண்ணாடியாக மாற்றுபவரே சிவராஜ பாட்டையின் வழி கூடி நடக்கும் தொண்டர் உள்ளத்து ஒடுங்கும் தனிகையர். தமிழில் உள்ள பல பழமொழிகளான *அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள், பந்திக்கு முந்து படைக்குப் பிந்து, ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்* போன்ற பலவற்றின் அகமிய ரகசியங்களும் ஆசான் அருளால் தன்னை அறியும் போதே விளங்கும்.

*ஜீவசகோதரர் சொர்ணமதி:* பாவச் சுவாலையில் சிக்கித் தவிக்கும் மக்கள் மனம் அசையா னிலையில் இருக்கும் செயலை குருபிரான் மூலமாக சிறிது சிறிதாக பழகித் தங்கும் அழியாத இடமே பொன்னரங்கம்.

*ஜீவசகோதரர் ரிஷி:* ஐம்புல நுகர்வை ஆசான் அருளால் ஆறாம் அறிவு கொண்டு அறிபவனே மனிதன். ஐம்புலத் தலைவனான மனதை அறிவு சொரூபமாக ஆக்குவதே அடக்கம். ஆசானின் னன் னாத ஒலியால் தூல உணர்வு யாவும் விட்டு ஜீவான்மாவுடன் கலப்பதுவே துறவுனிலை.

*ஜீவசகோதரர் மகாலிங்கம்:* மாயத் தோற்றம் யாவும் மாறுபட்ட தத்துவ வடிவமே. இறைவனின் சர்வ படைப்பிலும் தன்னை அறியும் அரும் பெரும் சக்தி மனுவிற்கு மாத்திரமே உண்டு. குரு பிரானிடம் சரணடைந்து, போகும் புனலான மனதை போகாப் புனலாக மாற்றுவதே பிரம்ம வித்தை.

**குருபிரான் அருளமுதம்:**

சித்தி முத்தி தரும் நினைவை அறிவதுவே உபதேசம். மூச்சு முளைக்கும் இடமே எண்ணத்தின் உதிப்பிடம். நல் எண்ணம் நவிலும் நாதனின் நாத தொனியை எதார்த்த உள்ளமுடன் ஏற்பதே நம் உள்ளத்தை சீராக்கும். பல கோடியாக விரியும் நம் எண்ணங்களை ஓர் கூரில் நிலைக்கச் செய்யும் பிரம்மவித்தை செயல் உள்ள இடமே ஆதிமார்க்க னீதி அவை.
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai July 2025

## 19-06-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
திருவடி ஞானம் அருளும் சிவ குருபிரானின் திருவாய் மொழிகளை செவி மடுத்து அதனை செய்லாக்குவதே பிருக்த யோகம். குருகுல வாசம் பயின்று உடல், பொருள், ஆவியை தத்தம் செய்து புலன் பொறி அடங்கி பேரறிவு பெற்று வாழ்வதே பேரின்பப் பெருவாழ்வாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம் எண்: 6** கல்லினுள் தேரைக்கும், கருப்பையுள் முட்டைக்கும் உணவளிக்கும் இறைவனின் கருணையை உணர்ந்தவர்களே உத்தம புருஷர்கள். மனுவின் நிறையான திசை எனும் சாகும் காலத்திற்கு முன் சாகப் பழகும் வித்தையை அருளும் சற்குரு பிரானிடம் சரணாகதி அடைந்து பழகியவர்களே சாவாவரம் பெற்று சாந்தி எனும் சலாமத்தை அடைகிறார்கள்.

**ஆனந்நக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:** சஞ்ஞீவி சடாமகுடரின் செம்மை உரையுடன் இரண்டறக் கலந்து எக்களிப்பில் திளைக்கும் இரகசியமே ஆனந்நக் களிப்பு. முந்தி வந்த துந்தியாகிய வெளிச்சப் பொருளின் கிரணமே, மண்ணில் மாண்டு கிடந்த மனுவின் அறியாமை இருளகற்றி எழுப்பி ஏறா நிலமிசையில் ஏற்றுகிறது. தவ சீலர்களின் தயவால் கனிவுடன் பாய்ந்து கை கலந்த சஞ்ஞீவி எனும் ஔஷதமே காரிடி எமன் எல்லையில் நம்மை காத்து ரட்சித்து ஜீவன் கடைத்தேறச் செய்கிறது. காலம் அறியாது அகால அறியாமை இருளில் ஆழ்ந்த அடிமைகளை மீட்டு ஆறாம் அறிவான ஆன்மப் பிரகாசத்தை காட்டி ஆனந்தக் களிப்படைய வைக்கும் ஆசானே அவரவரின் தன் பெற்ற இன் பொருளாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*வித்தை யவதாரணம் அதாவது வித்தையின் னிச்சயஞ் ஞெவ்வையாய்ச் சித்தித்தற் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பெற்ற அனேக தேவ வல்லபங்ஙளை யுடையவரே! னாதனே! பகவானே! சிவமும் குருவடிவமுமாகிய உமக்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***

## 21-06-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியருள் வருகும் அருமறை விதியோன்...** என்னும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மனுவின் கட்டாயக் கடமையாகிய கடவுளை வணங்குவது பிறவாமை பெறவே. சத்ரு, மித்ரு, பித்ரு இம் மூன்றும் மனிதனின் நினைவில் ஒரே பொருளாக இருப்பதை தன்னை அறிந்த தவ சீலர்களின் இரக்கத்தால் அறிந்து முக்தனாகலாம்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண்: 211 - குருபிரான் அருளமுதம்:** நம் வயது வாழ்நாள் வீணாகாமல் காக்கும் அருமருந்தே குரு பிரானின் ஓசை கொண்ட நடனம். அதுவே மறுபிறப்பு தேகத்தில் நம்மை புகுத்தாட்டி வைக்கும் அருளமுதம்.



Copyright © AMNA Trust, Chennai July 2025

**குருபெருமான் அருளமுதம்:**
தனக்குவமை இல்லாதான் திருத்தாளாக, எழுதாத எழுத்தாக, பாதமாக உள்ள திருவடி ரகசியம் அறிந்தவனே சிவலோகப் பதவி பெறுகிறான். நாதமாக விளங்கும் ஆசான் திருமேனியே இறைவனையும் மனிதனுள் இருக்கும் நான்கு தேக ரகசியமான ஓர் வகை, மூவகை, ஐவகை, எண் வகையும் அறியச் செய்கிறது. அறிவின் விழிப்பு நிலை பெற்ற பின்னரே நாம் ஒவ்வொரு நொடியும் மரணிப்பதை உணர முடியும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் பிரசங்கி - 6:9,11, ஏசயா - 2:22** ஆசையால் அலையும் மனமே பிசாசாகும். நம்மை ஆட்கொண்ட குருபிரான் ஒருவரே போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. ஜலம் நீக்கி பாலுண்ணும் அன்னம் போல் ஆசான் அருளால் அவித்தை நீக்கி வித்தை கொண்டு விழிப்புலகு செல்வதே பிரம்ம வித்தை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 22-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி இன்பலதா:* ஆசான் அருள் பெற்று ஒவ்வொரு மனுவும் ஜென்ம சாபல்யம் பெறுவதே விடியல். குரு பிரானை அறியும் போதே தன்னுலகம் விடிகிறது. குருவின் அறிவு ஒளியால் நம் அறியாமை இருளகல்வது விடியல். பிறப்பறுக்கும் பிஞ்சகனின் அருளால் பிறப்பு எனும் பேதமை கடந்து பிறவாமை பெறுவதே விடியல்.

*ஜீவசகோதரர் சாலை ராஜேந்திரன்:* காலத்தின் பிடியில் இருக்கும் மனிதனை காலமற்ற இடத்தில் குடியேறச் செய்யும் குருவே காலாதீதன்.

*ஜீவசகோதரி கலைவாணி:* யாதொன்றும் தீதிலாத சொல்லே குருவின் வாய்மை. தாயாக தந்தையாக தெய்வமாக விளங்கும் குருவே சிவன். அவரே ஜீவன் என்னும் அறிவாகிய பரம்பொருள். அவரே நம் இருள் மனத்தை அறிவுப் பிரகாசமாக ஆக்கி வைக்கும் ஞான சூரியன்.

*ஜீவசகோதரர் புகழேந்தி:* மனிதன் பெற்று வந்த தனிச் சீதனமே ஆறாம் அறிவுடன் சேர்ந்த மனம். குருவின் திருவருளே நம் அலையும் மனதின் அலைவறுத்து பிரம்மம் ஆக்குகிறது.

*ஜீவசகோதரி ஜெயலட்சுமி:* வாயில் சொல்லும் மந்திரத்தை தாயின் மேலான கருணையுடன் வரும் குருவே தரிசிக்கச் செய்கிறார்கள். அன்னவரே நம் அகக்கண் திறந்து காட்டி சாகாக் கல்வி ஈந்து அனித்திய ஆக்கை குடிலை விட்டு நித்தியத்தில் நிலைக்கச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சுந்தர்:* நம் மனம் திரும்பும் போதே பரலோக ராஜ்ஜியம் சமீபமாகிறது. சூக்கும தேகத்தில் குடியேறும் சூட்சுமத்தை அறிவிப்பவரே மெய்யான குருபிரான். அமரர் எனும் தேவர்களுக்கு உய்க்கும் அடக்கத்தை மடக்கிப் பிடிக்கும் மகத்தான செயலை மனமிரங்கி அருள்பவரே ஆசான்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தோற்றமிலா நரனை மனுவாக்கி தேவனாக்கி தெய்வமாக்கும் குருவின் அருள் மொழியே அமுதம். மாயத் தோற்றத்தில் மயங்காமல் நம்மை விழிப்புலகில் ஏற்றும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*சச்சிதானந்த வடிவினரும், வியாபக முடையவரும், பரமாத்மாவும், பிரகாச ஆனந்த வடிவினருமாகிய ஸ்ரீ குருனாதருக்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 26-06-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் நரராய் தோன்றி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

நித்தியமாக கடத்துள் விளங்கும் இயற்கை உண்மைக் கடவுளே அவரவர் நாமத்திற்குரிய பொருள். ஜீவாத்மா பரமாத்மா எனும் துவைத நிலையை அத்வைதம் எனும் அமானித நிலையில் செயலாக ஆக்குவதே ஆதி மார்க்க னீதி அவை. செயலுள்ள வாசகங்கள் மாத்திரம் உள்ளதே சாலை ஆண்டவர்கள் அருளிய ஆதி மெய் உதய பூரண வேதாந்தம். அவரவரின் ஆசானான அகக் கண் திறந்து காட்டி அழியாப் பொருளை தரிசிக்க வைக்கும் தவசீலரே குருபிரான். நேரிதை உணர்ந்த காமீல்களின் நெறிப் படுத்தும் செயலே நரனை முறை சங்காரம் செய்து மனுவாக மாற்றுவதாகும்.



**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**

னீதியை நடவு செய்யும் நித்தியரின் இரக்கத்தால் உயிரொட்டிய ரகசியம் அறியும் பொழுதே சமரசமும் சமாதானமும் உண்டாகும். செத்திடமும் பிறந்திடமும் இனிச் சாகாது இருப்பிடமும் சன்மார்க்கரின் தயவால் அறிந்த சற்சனர்க்கு வாழ்வாயும் ஏனையோர்க்கு வார்த்தையாயும் உள்ளது. சுயம்பிரகாச நித்யானந்த பிரம்ம சொரூபத்தை ஆசான் அருளால் அறிந்து பெருகிய சந்ததியே குருகுலம்.

**ஆனந்தக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:**

சிரத்தில் ஜீவித்து இறவாமல் காக்கும் ஆட்சியெனும் சிரஞ்சீவி சஞ்சீவியே நல்ல நாத மருந்தாகும். மனமெனும் கெட்ட னாரியரை பதமாக்கி ஓர்மையாக்கும் வல்லபமே ஆசானின் நாதம். ஐந்து கரத்தினுள் ஆறாவது அறிவாக விளங்கும் சைதன்யப் பொருளை ஆசான் அருளால் அறிவதே மறுபிறப்பு. தவசீலர்களின் தயவால் தன்னை அறிந்து மனம் அடங்கி நின்றதோர் பிரளயத்தின் நிலை அறிந்து சிவமான ஜாதியே பெரிய ஜாதியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 28-06-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **உபனிடதத் தெளிந்நவொளி மலையின் பாதம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

சாலை ஆண்டவர்கள் அருளிய திருப்பாடல்களை இசையுடன் பாடுவதும் அதன்படி இணங்கி வாழ்வதுமே உயிருக்கு ஊதியம் தரும் ஈதல் இசை பட வாழ்தல் என்பதாகும்.



Copyright © AMNA Trust, Chennai July 2025

**கோடாயிதக் கூர் திருவாக்கியம்: 211 (தொடர்ச்சி) குருபிரான் அருளமுதம்:**

அவரவரின் தன்னுலகம் விடியும் ரகசியம் நாளுக்குள் உள்ளது. கோள்களின் ஆதிக்கத்தில் உள்ள மானிடரின் கிரகங்களை அஸ்தமிக்க செய்பவரே நவக்கிரக கோளரி வாளர். அவர் அருளும் அக விடியலின் ரகசியமே ஞான ஸ்நானம் எனும் புறச்சடங்காகும்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம்: மத்தேயு: 18 : 3,4 பேதுரு: 1 : 2,3 கொரிந்தியர்: 1 : 15,55** - குருபிரான் அருளும் திருவசனமெனும் பரிசுத்த ஞானப் பாலை செவி வாயிலாக அருந்த, அழி அவா மனமானது திருந்தி, களங்கமற்ற குழந்தை போல் மாறுகிறது. எண்ணம் பலகோடியாய் விரிந்து எமனிடம் சேர்க்கும் மனதின் கீழ் னோக்கமே பாதாளமாகும். கூரான குருவருளை கூர்ந்து போற்றினால் தேகம் உள்ள போதே பரலோக ராஜ்யத்திலும் வாழலாம்.

**குருபிரான் அருளமுதம்:**

சர்வ மத வேதங்களும், அவரவர் நாமத்தின் பொருளை அறிந்து கைலாய பிராப்தி பெறுவதனையே உணர்த்துகின்றன. நாதம் விளைந்த நாதனின் அருளே நம் மனதின் மிடிமை இடரை நீக்குகிறது.

**ஆனந்நக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:** ஆசான் அருளும் அமுத சஞ்சீவியை அருந்தி விண்ணான சுழிமுனையில் உருகி னிற்பதே மரணமிலாப் பெரு வாழ்விற்கான வழி. மலர் மிசை ஏறி அரிதுயில் கொண்டு ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்தோரே ஆழ்வார்கள். தனக்கு உவமை இலாதான் தாளாகிய கற்பனைக்கு எட்டா சஞ்சீவியை கண்டு தரிசிக்க ஆசான் தயவால் நம் அகக்கண் திறக்கப் பெற வேண்டும். அறுசுவை கொண்டு ஒளிக்கும் அகர முதல் தனை உசுவாச னிசவாசம் மூலம் அறிவதே மெய்யறிவு. **ஆதியந்தம் வாலையவள் இருந்த வீடே ஆச்சர்யம் மெத்த மெத்த அதுதான் பாரு** என்ற கருவூரார் வாக்கின் படி அசலை உணர்த்தும் நகல் வடிவே ஆதி மார்க்க னீதி அவையின் சரவண நந்தவனத்தில் அமைந்துள்ள ஆதிசக்தி வாலைத்தாய் அம்மன் ஆலயம். குருவருளால் பாதமறிந்து வேத வழி சென்று எமபயம் கடந்து வாழும் வாழ்வே வாழ்வாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 29-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஶ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* நிறைவு தரும் மதியாகிய நிம்மதியை பரிசே குருவாக வரும் மெய்க் குருவின் துணை கொண்டே பெற முடியும். அவரவரின் மெய்ப் பொருளே சுயம் பிரகாச நித்யானந்த பிரம்ம சொரூபப் பொருளாகும். மின்னல் கிரணமாகிய ஜீவதேகத்தினுள் தினமும் நுழைந்து பழகுவதே சன்மார்க்கம். குருவின் தயவால் மாறாக ஓடுகின்ற மனதை வைராக்ய மணிக் கம்பத்தில் இறுக்கிக் கட்டி நிலைத்து நிற்கச் செய்தே, காலமற்ற இடத்தில் சாந்தியெனும் சலாமத்தை அடைய முடியும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிநிலைகளின் வாயிலாக மூல மந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரம் இவற்றை செயலாக்கி வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் குமார்:* மூல மந்திரத்தை வாயில் உச்சரிப்பதும் புற சடங்குகள் செய்வதும் கடந்து அகமியத்தில் இவற்றை குருவின் அருளால் செயலாக்குவதே எமனுடைய எல்லையில் வெற்றி தரும். தன்னில் இருக்கும் அறிவை ஆசான் அருளால் நேருக்கு நேர் சந்தித்து அறிவதே பிரம்மவித்தை. இறுதி பரியந்தம் வரை மெய்ப் பாதையில் பயணம் செய்பவருக்கே மோட்ச சாம்ராஜ்யம் கை வரவாகும். சுத்த சைதன்ய நாதர் சொல்லொரு பொருளினாலே சா வருமுன் சாகப் பழகுவதே மெய்க்கல்வி. இதை அவரவரும் பழகித் தேர்வதற்கான அரும்பெரும் செயலுள்ள தலமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது



Copyright © AMNA Trust, Chennai July 2025

## 29-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஶ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மாதவத்தின் தவ னிலையி னிருப்புமாகி...** என்ற வாத கற்பம் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் தேவானந்த்:* குருவருளால் எழுதாத எழுத்தாக உள்ள மெய்க் கல்வியை பழகி உணரும் போதே அனித்திய உடல் நாமல்ல என்ற அறிவைப் பெற்று மாயை விலகி மனம் தெளிந்து மகிமை பெற முடியும்.

*ஜீவசகோதரி விஜயலட்சுமி:* நமது நித்திய சொந்த தேகத்தில் குடியேறி வாழ தரப் பெற்றதே அநித்திய ஆக்கைக் குடில். குருவின் தயவால் வீடடையப் பாடு படும் வழியில் கவனமுடன் பழகி வர, ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறலாம்.

*ஜீவசகோதரி உமாராணி:* நவக்கிரக கோளரி வாளராகிய குருவே கோள்களின் ஈசனாகிய கிரகஸ்தன். அறிவு 12ம், 9 கோள்களுடன் சேர்ந்து 108 திவ்ய தேசமான நிலை கண்டு தரிசிக்கும் போதே பிறப்பு எனும் பேதமை நீங்கும்.

*ஜீவசகோதரி பூர்ணிமா:* உடம்பினுள் உத்தமனைக் காண தரப் பெற்ற சீதனமே ஆறாம் அறிவு. அலையும் மனதை ஆசான் தயவால் அலைவற்ற சைவ நிலையில் ஆக்குவதே அறம். தாயுமான சுவாமிகள் அருளியபடி ஓர் வார்த்தை சொல்லும் சற்குரு வாய்த்தவரே மறுபிறப்பு பெற்று மனுவாகின்றனர்.

*ஜீவசகோதரி அபிராமி ராஜமகேஷ்:* நித்திய வாழ்விற்கென வந்த மனு அனித்திய தேகத்தை நித்தியமாகவும், நரனை மனுவாகவும் அசலை உணர்த்த வந்த ஆலயம் அசலென நம்புவதும் அறியாமையே. மனதின் கீழ் நோக்கத்தை மேல் நோக்காக எண்ணும் அறியாமையை அகற்றும் வல்லபம் ஆசான் வாய்மைக்கே உண்டு.

*ஜீவசகோதரி ஜீவிதா:* அகமிய ரகசியம் அறிய அறிவு சம்மதிக்கும் செயலுள்ள தலமே ஆதி மார்க்க னீதி அவை. இதன் சான்றே பிரச்னோப நிஷத்தில் மகரிஷி பிப்பலாதரிடம், ரிஷிகள் அறுவரின் கேள்வியும், அவர் அருளிய விடையின் அகமிய விளக்கமும்.

1) மக்கள் எப்படி பிறந்தனர்?
*வினைத் தொடரால் பிறந்த நரன், குருவின் பிரணவச் சூலில் மறுபிறப்பு பெற்ற பின்னரே மக்களாகின்றனர்.*

2) மக்களை ஒளி வீசச் செய்யும் தேவ தேவதைகளில் சிறந்தவர் யார்?
*ஆண்டு கொண்ட குருவே தேவனாக, பஞ்சாட்சரமே தேவதைகளாக, அதில் சிறந்தது சி எனும் அட்சரமாகவும் உள்ளது*

3) மானிடச் சட்டையில் பிராணன் வந்த விதமும் அதன் செயலும் என்ன?
*பிரணவத்தால் உண்டாகி உடலுள் புகுந்து மனமாகி புலன் வழி அழியும் பிராணனை, குருவருளால் அழியாது காக்கும் செயலே பிரணாயாமம்.*

4) தூக்கம் விழிப்பு கனவு இன்பம் நுகர்வது, புருஷனிடம் எவ்விதம் உள்ளது?
*ஒன்பது கரணம் மூலம் அனுபவிக்கும் உடம்பில் உறையும் காரணப் பொருளான புருஷனை, ஐந்து அவஸ்தை கடந்த பேரின்ப விழிப்புலகு ஏற்றும் குருவே புருஷனாகும்.*

5) ஆயுள் முழுவதும் ஓங்காரம் உபாசிக்கும் ஒருவன் அடைவது எவ்வுலகு?
*அ + உ + ம் சேர்ந்த ஓங்காரத்தை உபாசித்து அழியா நிலை அடைவதே உடல் கண்டு உயிர் வழி பற்றி ஆத்ம வீடடைதல் என்பதாகும்.*



Copyright © AMNA Trust, Chennai 

6) 16 கலைகளுடன் கூடிய புருஷன் யார்?
*பதினாறு கலைகள் கொண்ட சோடசமெனும் பூரணத்தை அவரவருள் அறியச் செய்யும் குருவே பரம புருஷன்.*

*ஜீவசகோதரர் சங்கர்:* முப்பதியாக விளங்கும் முக்குணம் நிர்க் குணமாவது நித்தியனின் அருளால்தான். கோள்களின் பிடியில் சிக்கும் மனம் கொண்ட மானிடன் கடம் திடத்துடன் இருக்கும் போதே குருவருளால் அறியாமையுள் இருக்கும் அறிவை அறிவதே பிறவாமை பெற ஏதுவாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*சத்திய ஆனந்த சொரூபரும், ஞான முக்கியமான ஆனந்தத்தைச் செய்பவரும், வேத வேதாந்நங்ளா லறியப்படுபவரும், புத்திக்குச் சாக்ஷியுமாய் விளங்நுபவருமாகிய குருவிற்கு னமஸ்காரம்.*

**~ குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**01-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **தரைதனில் னரராய்...** எனும் பாடல் மத்யமாவதி ராகத்தில் பாடப் பெற்று அவை மலர்ந்தது. அதே ராகத்தில் வெவ்வேறு விருத்தங்கள் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று, சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி அவை இனிதே நிறைவானது.

**08-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **பூமியின் பாரம் தீர்க்க...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. தொடர்ந்து மத்யமாவதி ராகத்தில் பல விருத்தங்களும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று, ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

**15-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. தெய்வத் தேடு கூடகத்தில் இருந்து **வானெலாம் சிறப்போனாகி...** எனும் பாடல் விருத்தமாகவும், **செல்வச் சீர் னபியை...** எனும் பாடல் ராகத்துடன் பாடுவதற்கான பயிற்சியும் வழங்கப் பெற்று ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

**22-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய தனித்திரு பாடல்களில் இருந்து **அண்டமும் அதிபாதாளம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **வேதமும் உயிர்கள்...** எனும் விருத்தமும் **பண்ணாகி அருங்குமுதம்...** எனும் பாடல் வரிகளும் மத்யமாவதி ராகத்தில் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

**29-06-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **இணங்விய சுபாவம் பார்த்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. ஆதி மான்மியத்தில் ஆதியோதய தலைப் பருவத்தில் இருந்து **எல்லாண்டு எல்லாண்டு...** எனும் பாடல் பகுதி பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*னித்தியமானவரும் சத்திய (சுவரூப) மானவரும், சித் ஸ்வரூபமானவரும், னவமும், பவ்வியமும், பராத்பரமு மானவரும், சுத்த புத்த னிரஞ்ஜனமு மானவருமான குரு சேகரருக்கு, அதாவது பரமகுருவிற்கு எப்பொழுதும் னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **24-08-2025 / திண்டிவனம் ஞாயிற்றுக்கிழமை** | நமது குருபிரான் திருவுளப்படி விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் ஏவளூர் கீழ்க்காரணை கிராமம் மாரியம்மன் கோவில் ரோடு அருகில் உள்ள **சரவண நந்தவன** வளாகத்தில் –<br><br>காலை 6.00 - 7.00 மணி அளவில் ஆதி மார்க்க னீதி அவையின் **அங்கத்தினர் தங்கும் இடம் அடிக்கல் நாட்டும் விழா** மற்றும்<br><br>காலை 10.00 மணி முதல் **சரவண நந்தவன** வளாகத்தில் எழுந்தருளியுள்ள **அருள்மிகு ஸ்ரீ ஆதி சக்தி வாலைத்தாய் அம்மன் ஆலய கூழ் வார்க்கும் திருவிழா** நிறைவேற உள்ளது. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 ஜூன் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 60**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 48 – Month: July 2025*